இதழ் - சூசு

உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

திருவள்ளுவராண்டு 2052 24.02.2021

ஆய கலைகள் அறுபத்து நான்கு

ஆயும் உலகத்தமிழிதழ் அறுபத்து நான்கு

உள்ளடக்கம்

04 மாண்புமிகு அமைச்சர் உரை

05 ஆசிரியம்!

07 நீ.கந்தசாமி எனும் புலமையாளன்...!

08 ஏழு கடலுக்கு அப்பால்!

09 அவ்வப்போது!

10 எங்கள் ஊர் மாலை!

12 மறைமலையடிகளார் மாட்சி!

13 தேன் துளி!

14 பிரான்சில் தமிழ் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்களும், தீர்வுகளும்!

15 சூளாமணி சுருக்கம்!

16 ஆங்கிலம் அரும்பிய அரசும்–வாழ்வும்!

17 கார்த்திகை விளக்கீடு!

18 தமிழக அரசின் விருதுப்பட்டியல்!

19 கோயிற் கலைகள்!

உள்ளடக்கம்

20 சிலப்பதிகாரம்–ஆங்கிலம்!

21 குழந்தை இலக்கியம்!

22 Everlasting Tradition !

23 Saiva Siddhantam In Western Literature !

24 பாரதிதாசனோடு பத்தாண்டுகள்–ஈரோடு தமிழன்பன் நூல் அறிமுகம் !

25 தலைநிமிர்ந்த அடக்கம் !

26 பதிகங்களைப் படியுங்கள் !

27 இந்தியக் கலைகள் !

28 சர்வதேசத் தாய்மொழி தினம்–பிப்ரவரி 21 !

29 மலையாள மாகவி!

30 வெள்ளைக் காக்கை!

31 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்!

32 பூமழை !

35 நாடக வேந்தர் சேக்சுபியரின் மொழியாக்கப் பட்டியல்!

36 அறிவரசன் துணையகராதி!

37 சங்க இலக்கியம் அறிவோம் !

உலகத் தாய்மொழித் திருநாள்!

மாண்புமிகு அமைச்சர் உரை

64

திரு.க.பாண்டியராசன்
மாண்புமிகு தமிழாட்சி மொழி, தமிழ்ப்பண்பாட்டுத்துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்

அண்ணல் காந்தியடிகள் சிறை சென்ற தருணங்களிலெல்லாம் அவரது 'யங் இந்தியா' இதழுக்கு ஆசிரியர் பொறுப்பேற்றவர்கள் இராஜாஜி, மதுரை ஜார்ஜ் ஜோசப் ஜே.சி.குமரப்பா போன்றவர்களே.



'தேசியகவி' தாகூர் தாம் முதன் முதலாக காந்தியை, மகாத்மா என்று, 1921ஆம் ஆண்டு திசம்பரில், அழைத் ததாக பலரும் சொல்லுவர். **ஆனால், உண்மையில் காந்தியை, மகாத்மா என்று முதன்முதலாக அழைத்தது ஒரு தமிழரே; அவர் பெயர் க.சுப்பிரமணியம்.**

1912 ஆம் ஆண்டு திசம்பர் 24ல், வெளிவந்த 'சுதேச மித்திரன்' இதழில், தென்னாப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டம் பற்றி எழுதும்போது, காந்தியை, மகாத்மா என்று குறிப்பிடுகிறார்;

திரு.க.சுப்பிரமணியம் அப்பத்திரிகையின் ஆசிரியராகவும், நிறுவனராகவும் இருந்தார். 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ஆம் நாளன்று மதுரையில் வைத்து தான் ஒரு உடை விரதமாக தன்னுடைய எளிய ஆடை நோன்பினை காந்தி தொடங்கினார். வைகை அளித்த வரமாக அவருக்கு அது அமைந்து விட்டது.

அண்ணல் காந்தியடிகள் சுடப்பட்ட போது அவர் அணிந்திருந்த உடைகள் மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தான் மேற்கொண்ட போராட்டங்களுக் காகவும் பிரசாரங்களுக்காகவும் ஏறத்தாழ 80,000 கிலோ மீட்டர், அதாவது பூமியின் சுற்றளவில் இரண்டு மடங்கு தூரத்தை நடந்தே கடந்த மாமனிதராவார் அவர்.

நான்கு கண்டங்களில் உள்ள 12 நாடுகளில் சிவில் உரிமைகள் இயக்கத் திற்கு காந்தி பொறுப்பு வகித்திருந்தார்.

அமைதிக்கான நோபெல் பரிசுக்காக ஐந்து முறை நியமனம் செய்யப்பட்டவர்.

அமைத்திக்கான நோபெல் பரிசை வென்ற அறுவர் காந்தியக் கொள்கை களின் வழிவந்தவர்களே.

வளரும்...

இந்திய சீன நாடுகளின் எல்லைக் கோடு !

கடந்த சில மாதங்களாக இந்திய சீன எல்லையில் இலடாக் பகுதியில் பாங்காங் ஏரி என இரு கரையிலும் இருந்த படைகள் தங்கள் படைகளைத் திரும்பப் பெறும் செய்தி இரு நாடுகளுக்கும் மனநிறைவைத் தரும் எனலாம். சனவரி 24 ஆம் நாள் நடந்த இறுதி சுற்றுச் சுற்று உரையாடலுக்குப் பின்னர் சீனாவின் தலைநகர் பெய்ஜிங் தங்கள் படைகளைத் திரும்பப் பெறுவதாக அறிவிப்பைத் தொடர்ந்து சீனப் படையினர் திரும்பச் செல்வதை விண்வெளி ஒளிப்படங்கள் உறுதி செய்து வருகின்றன.

மக்கள் விடுதலை ஆட்படை எனப்படும் சீன இராணுவமும் இலடாக்கில் உள்ள இந்தியப்படையும் திரும்பிச் செல்லும் செய்தி மன ஆறுதலைத் தருகிறது. சுமார் பத்து மாதங்களாக இமயமலைச் சாரலில் லடாக் பகுதியின் பாங்காங் ஏரியின் வடகரையிலும் கைலாய மலைத் தொடரில் அமைந்த பாங்காக் ஏரியின் தென்கரையிலும் நமது படை வீரர்கள் சுமார் 15 ஆயிரம் முதல் 17 ஆயிரம் அடி உயர மலை உச்சியில் வெற்றுச் சுழியம் டிகிரிக்கு கீழ் சுமார் - 40ஊ வரை செல்லும் நடுங்கு குளிர் பகுதியில் நமது இராணுவ வீரர்களும் நமது படையின் திண்ணூர்திகளும் அணிவகுத்து இருந்தனர்.

நமது இராணுவம் மற்றும் காவல் படையின் ஆடவர் மகளிர் ஆற்றலாளர்கள் பணியின் பெருந்துயரையும் உறையும் குளிர் வளியையும் பொருட்படுத்தாமல் நாட்டைக் காக்க நின்றிருந்தனர். ஆசியாவின் இரு பெரும் அழிவை விளைவித்து விடும் என உலக நாடுகள் அனைத்தும் உற்று நோக்கிக் கொண்டிருந்தன. இரு படைகளும் திரும்பப் பெற்ப்படுவது தணிந்த இழு மூச்சைத் தருகிறது. பாங்காங் கரை மட்டுமின்றி டெப்சாங், கோக்ரா வெந்நீரூற்றுப் பகுதி டென்சாக் என்ற மற்ற பகுதிகளும் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவப் படைகள் திரும்ப வேண்டும். நல்லமைதிப் பேச்சின் முதல் படி இந்த வெற்றி இருவருக்கும் பொதுவெனக் கொண்டு பொறுமையுடன் அணுக வேண்டும் என எல்லைப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாங்காங் ஏரியின் வடகரையில் அடிக்கடி இரு நாட்டு போரணி வீரர்கள் பொருது முட்டும் செய்தி வந்த வண்ணமே இருந்தது.

2014 முதல் 2019 வரை இந்தப் பகுதியின் சீன ராணுவப் படையின் அவ்வப்போதைய ஊடுருவலோடு நமது படையினர் போராடிக் கொண்டே இருந்தனர். இந்தியப் படையாண்மையின் வலிமையை அறிவாற்றலுடனும் கூரிய திறமையாகக் குவியத் தொடங்கியதும் தான் சீன படைத் தலைமை விழித்துக் கொண்டு கலந்துரையாடலுக்கு ஆயத்தமாக இருப்பதாக தெரிகிறது. லடாக்கில் குவிக்கப்பட்ட இந்தியப்படைகள் மிகவும் பெருகிய எண்ணிக்கையிலும் போர்த்திண்மையோடு இருப்பதையும் நம் வீரர்களின் அஞ்சாநெஞ்சின் அடலேற்றின் மாட்சியையும் எண்ணி நாம் அனைவரும் பெருமை கொள்ளலாம்.

ரெசிங்லா எல்லை உச்சியில் எண்ணிப்பார்க்க முடியாத நளியிருங் குளிர்ப் பெருவெளியில் இந்தியப்படையின் இருபாலரும் போராடத் தயாராக நின்றது. நினைக்கும் பொழுது விம்மிதம் அடைகிறோம். இது சமாதானத் தீர்வின் தொடக்கம்தான் எனச் சொல்லப்படுகிறது. இன்னும் டெக்சான் பள்ளத்தாக் குகளில் தெலைத்பெக் ஆல்டி மற்றும் தற் புக் ஷியா சாலை போன்ற இடங்களில் பாதுகாப்பு, அச்சம் நீங்கி வர வேண்டியுள்ளது. அதன் அருகில் உள்ள வான ஊர்திப் பாதை கரகோரம் சுரங்கப்பாதை அனைத்தும் முக்கிய இடங்களாகக் கருதப்படுபவை. அதுவும் சியாக்சின் பனிப்பாறைகள் நம் நீர் வளத்திற்குத் தேவையானது எனப்படும் இடமாகும்.

சென்ற சூலைத் திங்கள் 2020 இல் கல்வான் பகுதியில் நடந்த மோதலில் நாம் நமது வீரர்கள் இருபதின்மரை இழந்தது நினைவிருக்கலாம். அப்போதிருந்தே நம் இராணுவ வீரர்கள் அப்பகுதியில் விழிப்புடன் கண்காணித்து வருகின்றனர்.

இத்தகைய சில எல்லையோரப் பகுதிகள் இன்னும் கூர்விழிப்புக் கண்காணிப்பிலேயே இருப்பதும் முதன்மையாகும் எனச் சொல்கின்றனர். குவான்பெங் என்ற சிங்கியா பல்கலைக்கழகப் பாதுகாப்புத் துறை ஆய்வு இயக்குநர் கூறியது போல எவ்வளவு வேகமாக சீனப் படைகள் திரும்பி அழைக்கப்படுகிறதோ அதே வேகத்தில் திரும்ப வந்து விடவும் கூடும் எனவும் எச்சரிக்கிறார். நம் படை வீரர்களும் எதற்கும் இம்மியும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை உணரமுடிகிறது.

இப்பொழுது திரும்ப சென்ற படைவீரர்கள் இருபுறமும் நல்லிணக்க அறிவிப்பாகக் கொண்டு தான் நகர்ந்துள்ளனர். லடாக் இந்திய - சீனப் பகுதியில் அமைதி நிலை கொள்ளுமானால் இரண்டு நாடுகளும் பொருளாதார வல்லரசுகளாக மாறுவதற்கு வழிவகுக்கும் என நம்பலாம்.



அருந்திறனாளர் பேராசிரியர் வீ. அரசு

மேற்குறித்த சூழல் உருவான போது, தமிழ்/சமசுகிருதம் தொடர்பான உறவுகள் குறித்த உரையாடல்களும் முனைப்புறத் தொடங்கின. தமிழ் நூல்கள் குறித்த கால ஆய்வுகள் உருவாயின.

சமசுகிருத இலக்கிய, இலக்கணத்தோடு, தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஒப்பாய்வு செய்யப்பட்டன. இதன்மூலம் இரு தேசிய இனங்களின் பண்பாடு மற்றும் மொழிசார்ந்த கருத்தாடல்கள் உருவாயின. இதில் தமிழை முதன்மைப்படுத்தும் பிரிவும் அதற்கு எதிர்நிலை எடுத்த பிரிவும் உருவாயின.

செந்தமிழ், சமசுகிருத மரபுகளைப் பல வகையில் முன்னெடுக்கும் வகையில் அமைந்தது. சமசுகிருதம் பயின்ற அறிஞர்கள் கூட்டம் செந்தமிழோடு பெரிதும் தொடர்பு டையவர்களாக இருந்தனர். அறிஞர் மு.இராக வையங்கார் போன்றவர்கள், சமசுகிருத மரபி லிருந்து தமிழ் மரபுகள் உருப்பெற்றிருக்க வேண்டும் என்ற அணுகுமுறைகளை முன் னெடுத்தார்கள்.

பின்னர் பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் முன்னெடுத்த கருத்து நிலைகளுக்குத் தளம் அளிப்பதாகச் செந்தமிழ்க் கட்டுரைகள் அமைந்தன.

மேற்குறித்த பின்புலத்தில் அத்தன்மைக்கு மாற்றான, தமிழை முதன்மைப்படுத்தும் கருத்தாடல் சார்ந்த அமைப்பாகவே ‘கரந்தைத் தமிழ்ச் சங்கம்’ உருவானது.

இச்சங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம் உரு வாக்குதல், பிறமொழி ஆதிக்கத்தைத் தடுத் தல் ஆகியவற்றை முதன்மைப்படுத்தியது. எனவே, ‘செந்தமிழ்’, ‘தமிழ்ப்பொழில்’ ஆகிய இதழ்கள் தமிழியல் ஆய்வை முன்னெடுத்தா லும் அடிப்படையான கருத்து நிலைகளில் வேறுபட்ட கண்ணோட்டங்களோடு செயல் பட்டன.

அறிஞர் நீ.க. அவர்கள், இதில் `தமிழ்ப் பொழில்` சார்ந்த கண்ணோட்டத்தில் செயல் படுபவராகவே தொடக்க காலத்தில் இருந்தார். திருக்குறளும் உபநிடதங்களும் (1938) என்று தமிழ்ப்பொழிலில் அவர் எழுதிய கட்டுரை மேற்குறித்த கருத்துநிலையை உறுதிப்படுத்து கிறது.

வளரும்...

64

ஆத்திசூடி | ATTISUDI | آتي سودي | 阿媞邱立 |

| ആത്തി ചൂടി | आत्तिचूडी | ఆత్తిచూడి | ଆଥୂଡି

தோற்பன தொடரேல்

Do not pursue unworthy deeds

لا تكسل

不盲目追從沒有價值的事

തോൽക്കുമെന്നറിഞ്ഞിട്ടും അക്കാര്യം ചെയ്യരുത്

पराजय निश्चित कर्म में लीन न होवें |

పని అపజయంలోనే ముగియును అని తెలిసి ఆ పనిని చేయకు

ಕೆಲಸ ಅಪಜಯದಲ್ಲೇ ಮುಗಿಯುವುದು ಅಂತಗೊತ್ತಿದ್ದ ಆಕೆಲಸವನ್ನ ಮಾಡೇಡ

வெற்றி வடிவேலன் - அவனுடை

வீரத்தினைப் புகழ்வோம்

சுற்றி நில்லாதே போ! - பகையே!

துள்ளி வருகுது வேல்!

முனைவர் ந.அருள்
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை

Professor Sankaranarayanan, retired though, is vibrant and creative till date. Decades of teaching, followed by association with the flower of Sastra University colour his academism. Little is known of his Sublime, for his works were brought out as limited editions. His Aaroor Arcanum and Pritvi is a verse-sequence and a play, a puzzle to discerning scholars. His Aacharya Devo Bhava is pure poetry revering his Guru Prof.K.G.Seshadri, by recalling gestations he experienced through his teacher.

Triambakam wrought in honour of his mentor Dr.T.N.Ramachandran is a strong string of inevident lyrics, capsuling the Devasabha influence on his person.

Three of the thirty-five episodes from Peria Puranam he dramatized came out as The Book Is Not The Word, The Axe Of God, and The Great Purloiner.-Dr. Avvai Natarajan has exclaimed in his foreword that **"Prof. S.A.Sankaranarayanan is a Prodigy."**

Translations of Tiruvacakam, of the Ninth and the Eleventh Tirumurais are difficult and amazing. Professor's alliance with anything poetic is mystical. A chunk of Erode Tamilanban's, he had translated supersonically. Of them, Salutations Valluva, Walt Whitman To Thine House I can deserve mention.

As a translator, Prof. S.A.S. is 'too close to the hermeneutic doorstep', as he himself says. His comparatist and translation enterprises are considerable in number. His understanding of Shakespeare and Milton is vastly different and takes off from Barkerian stage, and Blamiers's view. Yes, his readers must have the software already installed in them to read him.

Currently, Prof.S.A.S. divides his time between Sastra and Sankara college, giving lectures impeccably academic. Fascinating is the translation of Poet Tamilanban's Ghazal Piraigal by Prof. S.A.S.,whose introduction to the same is as usual subtle and great. In a line, Prof. S.A.Sankaranarayanan is 'altar, pen, and pulpit'.

27.03.2013

முனைவர் சோமலெ சோமசுந்தரம்
அமெரிக்கா

47

விமானத்தை விட்டு இறங்குகிறீர்கள். மணம் மிக்க வண்ணமிகு மென்மையான மலர்களின் இதழ்கள் உங்கள் கழுத்தை அரவணைக்க, அதை விட மென்மையான உதடுகள் உங்கள் கன்னத்தில் அன்பாக முத்தமிட.... இது என்ன கனவா? நனவா? நீங்கள் இறங்கிய இடம் அமெரிக்காவின் அவாய் தீவாக இருந்தால் அது நனவு!

மாலை அணிவது அமெரிக்க பழக்க வழக்கத்தில் கிடையாது; மணமிக்க, பல விதமான மலர்கள் குறைந்த விலையில் அமெரிக்காவில் கிடைப்பதில்லை. இதற்கு விதிவிலக்கோ அமெரிக்க மாநிலமான அவாய் தீவுகள். விருந்தினரை முத்தமிட்டு வரவேற்பது இரண்டாம் உலகப் போருக்குப் பின் வந்த பழக்கம், மாலையிட்டு வரவேற்பதோ அவாயில் தொன்று தொட்டு தொடரும் மரபு. **மலைகளுக்கு மட்டுமல்லாமல் மாலைகளுக்கும் பெயர் பெற்ற மாநிலம் அவாய்.**

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் பெரும்பாலான அமெரிக்கர்கள் பார்க்கத் துடிக்கும் மாநிலம் அவாய். அத்தீவுகளின் மலைகள், கடற்கரைகள், காடுகள், வருடந் தோறும் இதமான தட்ப வெட்ப நிலை ஆகியவற்றால் **அமெரிக்காவின் (ஏன் உலகின்) சொர்கமாகவே உள்ளது அவாய். "அவாய்த் தீவுகளைப் பார்க்காத வரையில் உங்கள் வாழ்வு வீண் தான்!"** எனச் சொந்த மண்ணைக் கொண்டாடுகிறது அவாய் பழமொழி ஒன்று!

அவாய் தீவுகளில் வானூர்தி நிலையங்களில் இறங்கும் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் மாலையிட்டு வரவேற்கின்றனர். பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு இந்த அனுபவம் கிடைக்காததற்கு காரணம் அமெரிக்கா பெரிய நாடு. பரப்பளவில் இந்தியாவை விட மூன்று மடங்கு! **அவாய் மாநிலம் மிகப்பல அமெரிக்கர்**

களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது! நியூயார்க் நகரிலிருந்து அவாய் மாநிலத்தின் தலை நகரான வோனலூலு 5,000 மைல்கள் தொலைவில் உள்ளது, பத்து மணி நேர விமானப் பயணம். அமெரிக்காவின் பல பகுதிகளில் இருந்து அவாய் செல்வதை விட இலண்டனுக்கு விரைவாகப் போய் விடலாம்.

பழங்கால அவாய் மக்கள் போரை நிறுத்த வெள்ளைக் கொடியைக் காட்டுவதற்குப் பதிலாக வாசமிக்க புதர்ச் செடிகளின் கொடியில் இலைகளையும், வண்ண மலர்களையும் தொடுத்து தாம் வணங்கிய லகா (Laka) ஊலா (Hula) என்ற பெண் தெய்வங்களுக்கு அமைதி வேண்டி செலுத்திய காணிக்கையே காலப் போக்கில் நம் கழுத்துகளில் விழுகிற (அவாய்க்குப் போகின்ற

அந்த அதிர்ஸ்டக் கழுத்துக்களைக் குறிப்பிடு கிறேன்) லெய் ஆக மாறிவிட்டது!

உலகப் புகழ் பெற்ற அவாய் மாலைகளை லெய் (Lei) என்கின்றனர். தலைமுறை தலை முறைகளாக லெய் மாலைகளைக் கட்டப் பயன் படுத்தப்படும் மலர்களைப் பயிரிடும் விவசாயி களும், லெய் மாலை வணிகத்தில் ஈடுபட்டுள்ள அவாயினரும் ஆண்டு தோறும் 2.5 மில்லியன் டாலர் (18 கோடி ரூபாய்) அளவிற்கு மக்களின் கழுத்தில் பூ வைக்கின்றனர்!

அவாய் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு முக்கியத் தீவிற்கும் சிறப்பு லெய் மாலைகள்

உள்ளன. ரோஜா, மல்லிகை, கதம்ப மாலைகள் போன்று ப்ளுமேரியா (Plumeria), கார்நேஷன் (carnation) ஆர்க்கிட் (orchid) எனப் பல வகையான லெய் மாலைகள் உள்ளன. வெள்ளை இஞ்சி என்ற பூ இந்தியாவிலிருந்து படகுகளில் பாலினேசியர்களால் இத்தீவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டதாம். மல்லிகைப் பூ போன்ற அரேபியன் மல்லிகைக்கு அவாய் இளவரசி காய்யுலானி தனக்கு மிகவும் பிடித்த பறவையின் பெயரில் சூட்டிய “மயில் பூ” என்ற பெயர் நிலைத்து விட்டது.

குழந்தைக்குப் பாலூட்டும் தாய்களுக்கும், கர்ப்பிணி பெண்களுக்கும் மட்டும் முடிச்சுப் போடாத மாலையை அணிவிக்கிறார்கள். தாயின் தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றிக் கொள்வது போன்ற துர் அதிர்ஷ்டத்தை முடிச்சுப் போட்ட மாலையின் அறிகுறியாக அவாய் மக்கள் கருதுவதே அதற்குக் காரணம்.

அரசியல்வாதிகளுக்கு ஆளுயர மாலைகளும், பாரம் தூக்கும் இயந்திரத்தை வைத்து தூக்க வேண்டிய அளவு எடையுள்ள மாலைகளும் தமிழகத்தில் போடப்படுவதை கேள்விப்பட்டுள் ளோம். **5,336 அடி நீளத்தில் தொடுக்கப்பட்ட லெய் மாலையே அவாயின் மிக நீள மாலையாகும்.** அந்த ஒரு மைல் நீள மாலை லெய் தினமாகக் கொண்டாடப்படுகிற மே தினத்தன்று வைகிகி நகரில் உள்ள கபியோலானி பூங்காவை அலங்கரித்ததாம்!

கொரோனா தீநுண்மித் தொற்றால் அவாய் மாநிலத்தின் முக்கிய வாழ்வாதாரமான சுற்று லாத் துறைக்கு ஏற்பட்ட பாதிப்பால் லெய் விற் பனை மிகப் பெரிய தொய்வைக் கண்டுள்ளது. **லெய் மாலையை அலங்கரிக்கும் மலர்கள் புது மலர்ச்சியோடு சில நாட்களே இருப்பதால், அவை "live in the present" என்ற தத்துவத்தை வலியுறுத்துகின்றன.** நேற்றையும், நாளையையும் பற்றிக் கவலைபடாமல், இன்றை (ஒவ்வொரு நாளையும்) அனுபவிக்க அவை நினைவுப் படுத்துகின்றன என்கின்றனர் அவாய் மக்கள். உலகின் சொர்க்கத்தில் வாழும் அவர்களின் வாழ்வும் அது போன்றே அமைந்துள்ளது!

மறைமலை அடிகளார் மாட்சி !

13

அறிஞர் ந.ரா.முருகவேள்

பழந்தமிழ்ப் பண்டிதர்கள் கிரேதாயுகம், திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவற்றையே தம் கால ஆராய்ச்சி அளவையாகக் கொண்டும் புராணம், சரித்திரம், கதை, காதை என்னும் சொற்களையே ஒன்றற் கொன்று வேறுபாடு தெரிந்து கொள்ளாமல் மயங்கியும் வழங்கி வந்த நிலையில், வரலாறு என்னும் புதிய தொரு அழகிய அருஞ் சொல்லைக் கண்டெடுத்தார்.

அதனைப் பெய்து 100 பக்கங்களில் மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் - என்னும் செந்தமிழ்த் தனிப்பேராராய்ச்சிப் பெரும் பயன் நூல் தம் நல்லிசைப் புலமை

நலந் தோன்றவும், தமது அரும் பெறல் ஆராய்ச்சி முடிபுகள் யாவும் அடங்கவும், தமிழ்த் தாய்க்குத் தனிப்பெரும் உரை நடை நூல் இல்லாப் பெருங் குறை தணியவும், 'ஒரு பெரும் விழுமிய சமண மணிக்கோயிலாய்ச் சைவ மெய்ச் சமயத் தெய்வமும் செந்தமிழ்த் தெய்வத் தனிமகளும் ஒருங்குகூடி, மெய்யறிவுச் செங்கோல் ஒளியரசு நடாத்தும் மாபெரும் நிலையமாய் கிலைபேறுற்று நிலவுமாறு' செய்தமைத்தருளிய அருமைத் திறத்தினை என்னென்பேம்!

ஆசிரியர் மெய்கண்ட தேவர் இயற்றியருளிய சிவஞானபோதம் மொழி பெயர்ப்பு நலன்று செந்தமிழ் பகல் கால என்று அஞ்சாதெடுத்துரைத்து ஆண்மை பாடு லேபெறுத்தியவரும், மாணிக்கவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டே என்பதனை எவரும் மறுக்கொணா வகையில் நிலைநாட்டித் தனித்தமிழ்க் காலம், பக்திகாலம், சமண காலம், சைவ, வைணவ காலம், பார்ப்பன காலம், ஆங்கில காலம் எனத் தமிழக வரலாற்றின் கால வரன்முறைகளை ஒழுங்கு படுத்தி, அதை உறுதி செய்து கொடுத்தார்.

தமிழர்கள் தம் ஆண்டுக் கணக்கினை இப்போது நடைமுறையில் வழங்கி வரும் சகாப்தங்கட்கு மாமுகத் திருவள்ளுவர் காலத்தினையே கைக்கொள்ளுதல் வேண்டும் என்னும் கருத்தினராய் அதனை முதன் முதல் ஆராய்ந்து அறுதியிட்டு உறுதிசெய்து நெடுநாட்களாகத் தம் நூல்களிற் கையாண்டு வருபவரும், தமிழர் நாகரிகம் தமிழ்மொழிச் சிறப்பு, சைவ சித்தாந்த தத்துவ உண்மை, சங்க இலக்கியங்களின் மேன்மை முதலியவற்றை மிகத் திறம்பட ஆராய்ந்து தம் நூல்களானும், விரிவுரைகளானும் யாண்டும் பரவச் செய்து அவை தம்மை மறுமலர்ச்சி பெறுமாறு செய்தவரும் மறைமலை அடிகளே!

வளரும்...

தேன்துளி –1

பூம்புகார் நகரம் - பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலண்டன் மாநகரத்தைக் காட்டிலும், நகர்ப் பரப்பினாலும் பிற பெருமைகளாலும் சிறப்பாக இருந்துள்ளது.

மாட மாளிகைகள், செந்தமிழ் மன்றங்கள், கோவில்கள், கோட்டங்கள், ஆற்றங்கரைகள், கடற்கரைகள், பெருந் தோட்டங்கள், பூம் பொழில்கள்.

நினைப்பில் அளவிட்டு எண்ணிப் பார்க்க இயலாத பேரழகு,எங்கள் புகார் என்ன அழகு ! என்ன அழகு ! சொல்லிமாளாத பேரழகு ! சொல்லி மீளாத பேரழகு !

நம் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழந்து முடிந்த பழமையை நினைக்கும் போது எவ்வளவு பெருமிதமாக இருக்கிறது.....!

தேன்துளி - 2

"My entry into and exit from the earth take place only once. Hence, I shall do a good deed! I shall accomplish it at once ! There is no time to either postpone it or avoid it; because, I may not come once again to this earth."

- Engineer, Col. J. PENNY CUICK
Architect of Mullai-Periar Dam

பிரான்சில் தமிழ் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்களும், தீர்வுகளும்!

திருமதி ஞானா பியாட்றிஸ் சச்சிதானந்தம்
தமிழாசிரியை, பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம், பாரிசு

6

தமிழ் மொழி கற்றல், கற்பித்தலில் பாட நூல்களின் பங்கு

தமிழ் மொழி கற்றல், கற்பித்தலில் பாடநூல்களின் பங்கு எனும் போது, பொது வாக பாடநூல்கள் தன்மதிப்பீடு செய்யப் படல் வேண்டும்.

அதாவது எழுதியவரே மாணவர் நிலையி லிருந்து பாடநூல்களுக்கான மதிப்பீடு செய்ய வேண்டும். அப்போதுதான் மாண வரின் தரத்துக்கு எழுதிய நூல் கடின மானதா? இலகுவானதா? என்பதை அறிய

முடியும். நூல்களைத் தயார் செய்யும் போது, அத்துறை சார்ந்த வல்லுனர்களின் கல்வி யியல், அனுபவக் கருத்துக்களையும், புலம் பெயர் வாழிடங்களில் களநிலையில் உள்ள கல்வியாளர்கள் மற்றும் பட்டறிவாளர்களின் அனுபவங்களையும் பெறவேண்டும். அப் போதுதான் அந்தந்த நாடுகளில் உள்ள மாணவர்களின் சிரமங்களை மனதில் நிறுத்தி பாடநூல்களை ஆக்க முடியும்.

மாணவர்களிடம் நூல் பற்றிய குறை, நிறைகளை உசாவி அதற்கு ஏற்ப மாற்றம் கொண்டு வரவேண்டும். மேலும், மாணவர் படிக்கும் நேர அளவைக் கருத்தில் கொண்டு, பாடத் திட்டம் முறையானதாக அமைய வேண்டும்.

பிரான்சில் தமிழ் கற்கும் நேர அளவு என்பது, பல பள்ளிகளில் வாரத்தில் ஒன்றரை மணிநேரமும், சில பள்ளிகளில் வாரத்தில் இரண்டு மணி நேரமும், எமது பள்ளியில் வாரத்தில் நான்கு மணி நேரமும் ஆகும். இந்த நேர அளவு என்பது மிகவும் குறுகியதாகவே உள்ளது ஆகவே அதற் கேற்ப வகையில் பாடத்திட்டம் அமைதல் அவசியம்.

கடினமான சொற்களையும், வழக் கொழி ந்த சொற்களையும் தவிர்த்துக் கொள்வது மாணவரின் கற்றலுக்கு இலகு வாக இருக்கும். அன்றியும், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் அறிஞர் களின் ஆலோசனைகள். கருத்துக்கள், அனுபவங் கள் என்பன ஆசிரியர் மையக் கல்விப் (Teacher Oriented Education) போக்கினைக் கொண்டவை. இந்த ஐரோப்பிய நாட்டு அறிஞர்களின் கல்வி அனுபவங்கள் மாணவர் மையக் கல்வி (Student Oriented Education) நோக்கினைக் கொண்டவை. அதன் விளைவாகத்தான் எதிர்பார்த்த பயன் கிடைக்கத் தவறியது.

வளரும்...

உரைவேந்தர் ஔவை துரைசாமி

யசோதர காவிய அச்சுப் படியைத் திருத்திக் கோடற்பொருட்டு, விழுக்கம் திரு.குப்புசாமி நயினார் கொடுத்த கையெழுத்துப்படியில் முதலாவது யசோதர காவியம் என்று குறிக்கப் பட்டிருக்கக் கண்டேன். யசோதர காவியப் பதிப்பாசிரியரும் சிறு காவியமைந்தனுள், அக் காவியம் முதலாவது என்றே குறித்திருக் கின்றார். இவ்வைந்தனுள், நாக குமார காவியம் இன்னும் கிடைக்காமையால் வெளி வரவில்லை.

சமண முனிவர்கள் நம் இனிய தமிழ் மொழிக்கண் செய்துள்ள காவியங்களுள் தேன் மணக்கும் தமிழ்நடையும் செம்மை மணக்கும் கருத்துக்களும் கொண்டு படிப் போருள்ளத்தை உண்மைப் புலமையின் நுட் பத்தை நன்கறிந்து பேரின்பமடையச் செய்யும் பெருமையுடையது இச்சூளாமணியே யாகும். இன்பம், வீரம், அருள் முதலிய சுவை வகைகள் எல்லாவற்றினும் இந்நூல் இணை யின்றி இலங்குகிறது.

எண்ணுந்தோறும் இறும்பூது பயக்கும் சொல்லாடல்கள் எம்மருங்கும் காணப்படு கின்றன.

இயற்கையன்னையின் இன்பத்தோற்றத் தை நம் உள்ளக் கிழியில் எழிலொழுக எழுதிக்காட்டும் இனிய தூரியக்கோல் இச்செந்தமிழ்க் காவியம் என்பதற்கு என் உள்ளம் ஆசைப்படுகின்றது.

சொல் வன்மை, சோர்வின்மை, அஞ் சாமை என்ற மூன்றும் இந்நூலிலுள்ள ஒவ்வொரு சொல்லிலும் ஒளிவிட்டுத் திகழ்கின்றன. சுருங்கச் சொன்னால், இச் சூளாமணியை சூளாமணி என்று பெயரிட் டது முற்றும் பொருத்தமேயென்று கூறு வது சாலும். சிறு காவிய மென்பனவற்றுள் இதனை ஒன்றாக வைத்தவர் சிறுமை, பெருமை களைத் தெரிந்துணரும் மதுகை யில்லாதவர் என்று கூறலாம். ஏனெனில், காவிய நெறியிலாதல், கவி நடையிலாதல், கருத்து வகையிலாதல் இதன்கண் எத்தகைய சிறுமையும் காணப்படவே யில்லை.

திருத்தக்கத் தேவர் பாடிய சீவக சிந்தா மணியினும் இச்சூளாமணி உயர்வு பெரிது டையது என்று தமிழறிஞர் கருதுவதும் வாய்த்தவிடத்து எழுதிவிடுவதும் சொல்லி விடுவதுமுண்டு.

வளரும்...

ஆங்கிலம் அரும்பிய அரசும் - வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம்
திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

8

நாட்டுக்கு நல்ல பணிகளைச் செய்து கொண்டிருந்த அம்பிப்போலஸ் அவர்களைக் காப்பாற்ற விரும்பிய அல்பான் அவர்கள், பாதிரியார் போல ஆடை அணிந்து சென்று தாம்தான் அம்பிப்போலஸ் என்று கூறி உரோமானியர்களிடம் சரணடைந்தார்.

அவ்வாறு சரணடைந்தவர் அம்பிப் போலஸ் அல்லர் என்ற உண்மை சிலகாலம் செல்ல அம்பலமாகியது. தேடல் வேட்டை மீண்டும் தொடங்கியது. சிலமாதங்களின் பின்னர் அம்பிப்போலஸ் பிடிபட்டார். பிடி பட்ட அம்பிப்போலஸ் அவர் களை உரோமனிய அதிகாரிகள் கல்லால் எறிந்து கொன்றார்கள் என்பது வரலாறு.

உரோமாபுரியும் கிறித்தவத்தைத் தழுவியது

கி.பி 300 ஆம் ஆண்டு வரை கிறித்தவ சமயத்தை இத்தாலியில் பரப்ப முடிய வில்லை. அவ்வாறு பரப்ப முயன்றவர்கள்

இத்தாலியில் படுகொலை செய் யப்பட்டார்கள். கொன்ஸ் ரான் ரியஸ் (Constantius) என்பவன் கி.பி 305 ஆம் ஆண்டளவில் உரோமாபுரியின் சக்கரவர்த்தி யாக முடி சூடினான். கி.பி 306 ஆம் ஆண்டளவில், உரோமாபு ரிக்கும் அன்றைய பிரித்தானி யாவுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு போரின் போது கொன்ஸ்ரான்ரியஸ் உயிரிழந்தான்.

அதனையடுத்துக் கொன்ஸ்ரான்ரைன் (Constantine) என்பவன் உரோமாபுரியின் சக்கரவர்த்தியாக முடிசூடினான்.

ஆனால் அவனால் நிம்மதியான ஆட்சி நடத்த முடியவில்லை. உள்நாட்டில் அவ னுக்கு எதிராக எழுந்த எதிரிகளை அடக்கு கின்ற முயற்சிகளில் பல ஆண்டுகள் சென்றன. பதினாறு ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன. கி.பி.324 ஆம் ஆண்டில் கிறித்துநாதர் அவனது கனவில் தோன்றி, அவனது முன்னேற்றத்துக்கான வழிவகை களை எடுத்துக்கூறினாராம்.

கிறித்துநாதரின் அறிவுரைகளைப் பின் பற்றிய அவனுக்கு வெற்றிமேல் வெற்றிகள் வந்து குவிந்தனவாம். இந்த வெற்றிக் களிப்பின் விளைவாக அவன் கிறித்துவ சமயத்தை உரோமாபுரியிலும், உரோமாபுரிப் பேரரசின் கீழ் இருந்த ஏனைய நாடு களிலும் அரச சமயமாக, (State religion) பிரகடனம் செய்தான். கிறித்தவ சமயத்தை முதன் முதலாக ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் பரப்பிய கொன்ஸ் ரான் ரைன், அந்தச் சமயத்தைப் பிரித்தானி யாவிலும் பரப்பி நிலைபெறச் செய்தான். இந்த முயற்சிதான், கிறித்தவ சமயம் பிற் காலத்தில் உலகெங்கும் பரவுவதற்கு வழி கோலியது.

பிரித்தானியா பதினெட்டாம் நூற்றாண் டளவில், நாடுகள் பலவற்றைக் கைப்பற்றிப் பேரரசாக மாறியபோது, பிரித்தானியாவின் ஆளுகைக்குக்கீழ் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் கிறித்தவ சமயம் பரவியது.

வளரும்...

கலங்கரை விளக்கு

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பெருங் கவிஞர், தாம் திருவண்ணா மலையின்மீது பாடியருளிய சோணசயில மாலையின்கண், ' பிறவிக் கடலைக் கடந்து முத்தியாகிய கரையிற் சேர விரும்புவோர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தமது தவவொழுக்கம் ஆகிய கப்பலை மேற் கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, ஒரு கலங்கரை விளக்கைப்போல உயர்ந்தெழுந்து ஒளிதந்து விளங்குவது திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம் ' என்னும் கருத்து அமையப் பாடுகின்றார்.

பிறவி = கடல்
முத்தி = கரை
உலகியல் = வழி தெரியாத
மயக்கம் = திகைப்பு
தவ ஒழுக்கம் = கப்பல்
திருவண்ணாமலை தீபத் தம்பம்
கார்த்திகைத் தீபம் = கலங்கரை விளக்கு

என அமையும் முறையில், அழகிய இனிய உருவகம் செய்து அவர் பாடியிருக்குந் திறம் வியந்து மகிழ்தற்குரியது.

" துவக்கற அறிந்து பிறக்கும்ஆ ரூரும்
துயர்ந்திட தடைந்துகாண் மன்றும்
உவப்புடன் நிலைத்து மரிக்கும் ஓர் பதியும்
ஒக்குமோ நினைக்கும்நின் னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே "

முடிவுரை

இறைவன் ஒளி வடிவமாகத் திகழு கின்றான் என்னும் கொள்கை, எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளத் தக்க சிறந்ததொரு பேருண்மையேயாகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் 'கார்த்திகை விளக்கீட்டு விழா' யாவருமே கொண்டாடி, இறை வனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும் என்பதிற் பிழை யில்லை.

எனவே, கார்த்திகைத் திருநாளில் ஒளிவடிவாகத் திகழும் இறைவனை, உலகுயிர்கள் எல்லாம் இடர்தீர்ந்து நலம் பெறும் பொருட்டு, மன மொழி மெய்களான் வணங்கி வழிபட்டு மகிழ்வோமாக !

..... நிறைவு .....

தமிழக அரசின் விருதுப் பட்டியல் !

தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களுக்கு அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் வழங்குதல். (விருதுத் தொகை ரூ. 25,000/- மற்றும் தகுதியுரை வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்படும்).

XXXIII

தென்காசி மாவட்டம்

வ.எண்.	ஆண்டு	விருதாளர்
1	2019	திருமதி.உமா கல்யாணி

கோயிற் கலைகள் ! 4

மூதறிஞர் வ.சுப.மாணிக்கம்

இறைவன் படைத்த பொருளாயினும், மனிதன் ஆக்கிய பொருளாயினும் ஒரு வடிவுண்டு, அதற்குத்தக ஓர் அழகுண்டு. கலையுணர்வும், அழகுணர்வும் எல்லார்க்கும் ஒன்றாக இருப்பதில்லை, இருக்க வேண்டும் என்பதில்லை. அதனாலன்றோ உடைகளும், உணவுகளும், நுகர்பொருள்களும் வடிவங்களும் பலப்பலவாயின.

ஒருவர்க்குப் பிடித்ததுதான் கலை யென்றோ பிடியாதது கலையில்லை என்றோ கொள்ள முடியாது. காலங் கடக்கக் கடக்க, பழமை மெருகு ஏற ஏற, தொல்பொருளெல்லாம் விலைமதிக்க முடியாத, அருங்காட்சிக் கலைப்பொருளாய்ப் போற்றி உலகெங்கும் காக்கப்படுவதை நாம் அறிவோம்.

பதினாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட ஒரு வண்ண மட்பாண்டத்திற்கு, பயன்பட்ட அக்காலத்து இருந்த மதிப்பைவிட, இன்றுகவின் மதிப்பும், காப்பும் பெரிதாகின்றது. ஆதலின் எதுவும் கலையேயாம், என்றும் கலையேயாம். எனினும் ஒன்று நினையின்; எல்லாம் கோயிற் கலையாகி விடா.

எது கோயிற்கலை?

உலகியற்கலை வேறு; கோயிற்கலை வேறு. ஒரு கல்லைச் சித்திரத்தூணாக, வடிவமைந்த படிக்கட்டாக, வனப்பான யானையாக, சந்தனக் கல்லாக வடிக்கின்றோம். ஒரு மரப் பகுதியை, இருக்கும் அழகிய நாற்காலியாக, அழகொழுக எழுதும் என் மேற்பலகையாக, திருவாழ் நிலையாக. ஓவியத் தடியாக உருக்கொடுக்கின்றோம்.

விலையழகும், கலையழகும் இவற்றில் உண்டு. பொலிவு மிக்கவனாக இருந்தாலும் இவற்றைக் கைகூப்பித் தொழுவோமா? பூப்பலி செய்து வணங்குவோமா? செய்யோம். ஏன்? இவை தெய்வவூட்டம் பெற்றவையல்ல. தெய்வவுணர்வைத் தருவனவல்ல. இவற்றை நாம் பார்க்கும் போதும் பயன்படுத்தும் போதும் புறக்கலையாகக் காண்கின்றோமேயன்றித் தெய்வக்கலையாக காண்பதில்லை. அதனால் நம் உள்ளம் தெய்வத் தன்மை பெறுவதில்லை.

வளரும்...

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழக அரசு

Canto - 7

Strike lusty blues; sinks Sun in

West; world to lull come you've

see the cruel deserter, and all

world dull and poor hence!

O Mighty Main's Deity, We bow unto thy flower feet!

51

Fanning fire evening heats and

smarts us; brook his swearing:

'I won't part from',O, Sea Deity,

hail we thy flowery feet!

Lover Leaves for...

Author tells

52

Having heard

Maadavi, thinks a different Kovalan:

Mine is lido libretto; hers set on different royal strains;

lie and deceit interweave;

she is a certain

a certain nymph of sorts deluded by string and strum !

On yaazh's grammar fatum works in fury;

he gives up the embracing moon:

53

"it's late, get away let us, rise", he says!

With attendants his exeunt!

Maadavi bows

to friends in grove, dazed,

wordless, boards her cart;

wheels homeward! Hails,

'may Chola with his Parasol,

lustrous sword, caparisoned elephant,

hold fort over hill of ChakravaaLam, garlands on,

long live may he'

and she enters hers!

Misprision between Cauvery and Sea, No dialogue can be!

54

To Continue...

முனைவர் தேவி நாச்சியப்பன்

"காலம் பொன் போன்றது" என்பதால் பொன்னினும் மேலானதாகக் காலத்தைப் போற்ற வேண்டும். இன்று பெரிய நிறுவனங் களில் கூடக் கால மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உரிய நேரத்தில், உரிய செயலைச் செய்ய வேண்டும். இப்பண்பைக் குழந்தைப் பாடலாகக் கவிஞர்கள் பலர் தந்துள்ளனர்.

"காலக் கழிவு செய்யாதே - நீ
கடமை செய்ய மறவாதே;
காலத்தை வீணாய்ப் போக்காதே; -எதையும்
காலத்தில் செய்ய மறவாதே "

கவிஞர் அ.கி.பரந்தாமனார் இப்படிப் பாடினார்.

கவிஞர் குயிலன்,

"காலம் என்னும் செல்வம் - நமக்குக்
கடவுள் தந்த செல்வம்.
மேலும் மேலும் கிடைக்கும் - செல்வம்
போலக் கிடைப்பதில்லை.
செலவு செய்த செல்வம் - பின்னர்
தேடிக் கொள்ள முடியும்.
செலவு செய்த காலம் - என்றும்
திரும்பக் கிடைப்ப தில்லை.
....
வீணில் காலம் போக்கி - நீ
விரயம் செய்ய வேண்டாம் "

இந்தப் பாடல் வழி, செலவு செய்த காலம் திரும்ப வராது. எனவே காலத்தை வீண் செய்யலாகாது எனத் தெளிவுபடுத்துகிறார்.

காலத்தைப் பகிர்வு செய்து செயல்படும் விதம் குறித்த பாடலைக் காண்போம்.

" ஓடி ஆட ஒருநேரம்
உணவை உண்ண ஒருநேரம்
பாடம் படிக்க ஒரு நேரம்
படுத்துத் தூங்க ஒருநேரம்
பெற்றோ ருக்கு ஒரு நேரம்
பிறருக் காக ஒருநேரம்
இப்படி நேரம் ஒதுக்கிடுவேன்.
என்றும் இன்பம் பெற்றிடுவேன் "

என்று குழந்தைகள் காலத்தைச் சரியாகப் பகிர்ந்து கொள்ள ஏற்ற பாடலைக் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா பாடி யுள்ளார்.

ஆடி, ஓடி விளையாடும் பருவத்தில் இருக்கும் குழந்தை விளையாடவும் வேண்டும். பெற்றோருக்கும், பிறருக்கும் உதவுதல் வேண்டும். உண்ணுதல், உறங்கு தலுக்கான நேரத்தில் அவற்றைச் செய்யவும் வேண்டும்.

நேரத்தைச் சரியாய்ப் பயன்படுத்துவதே இன்ப வாழ்விற்கான வழி என்பதைக் குழந்தைகளுக்குச் சொல்லும் பாடலாக இது அமைந்துள்ளது.

வளரும்...

9. Virtue Sin

Following him, the Supreme Court would confirm the same punishment.

A petition for mercy sent to the President of India too would confirm the death sentence.

The reason being -- the incident was so frightful that it merited the death sentence.

In Mayavaram lived a widow aged forty who was resplendent with beauty.

She had jewellery worth sixty thousand rupees.

She lived in her own house with a servant maid as her only companion.

Spying this, some intruders entered her house one night.

Five of them raped her. Shocked and short of breath she died.

Even after she died, another raped her.

Yes; the medical report said so.

The jewels had been stolen, the murderers had escaped.

But, within a fortnight they were caught.

They were seven in number.

In the prison, six out of the seven were trembling with fright at the they were thought that they were going to be hung the following day.



Chanting the Lord's name.

One alone remained calm without any sign of agitation.

To Continue...



Saiva Siddhantam In Western Literature!

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் டி.என்.இராமச்சந்திரன்

5

I opened my lecture with a quote from Triloka -Sitaram. I'll repeat it again. "Certain words, there are, which are wrought of adamant." Truer words were, perhaps, never spoken. 'Advaita' is one such word. Even metaphysicians and philosophers endowed with exceptionally sharp intellect, find it difficult to comprehend the meaning of Advaita as posited by Siddhantam.



Meikanda Deva rejected the explanations of bheda, bhedaabheda and abheda which were prevalent in his time, redefined them and also furnished telling examples to elucidate these concepts. The popular theories of bheda, bhedaabheda and abheda are not only included in his definition of 'Advaita', but are also beyonded by it. Therefore it is, St. Thaayumanavar hails him thus: "Whoever did expound 'Advaita as you did, oh Meikanda Deva!"

Advaita is posited by Shankara Bhagavad Paada, is Monism. Advaita according to Meikanda Deva is Nondualism. When the Rig Veda says **"One it means that Reality is but One, that the Lord is one only. That's all."** The person who articulates the word "One" is differ from Pati. He is a Pasu, a fettered soul.

The Veda only says, that just as there can be no letters if the vowel “A” is not, so also there is nothing if God is not.

ஒன்று என்றது ஒன்றே காண்;
ஒன்றே பதி; பசுவாம்
ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை
காண்-ஒன்று இன்றால்
அக்கரங்கள் இன்றும் அகர உயிர்
இன்றேல்
இக்கிரமத்து என்னும் இருக்கு

Saiva Siddhantam posits tripadarthas (the Lord, the soul and the fetter). If it be so how is Mukti explained? Does the soul become non different from God in Mukti? The answer to this question is an emphatic 'No'. Advaita which is வேறன்மை (not வேறின்மை) does not mean non-difference, but only non-separatness.

To Continue...

"பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள் - ஈரோடு தமிழன்பன்"

திருமதி இராஜி இராமச்சந்திரன், அட்லாண்டா

1

வழக்கமாக நூலாசிரியரின் உரை “முன்னுரை”, “என்னுரை”, “முகவுரை” என்ற தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் இருக்கும். ஆனால், இந்த நூலில் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் தம் உரைக்கு **“கதவுரை”** என்று புதுமையாகத் தலைப் பிட்டிருப்பதே தனித்துவமான தொடக்க மாக உள்ளது.



பாவேந்தரோடு மட்டுமின்றி, அவருக்குப் பின் அவரது கொள்ளுப்பேரன், பேத்திகள் வரை இன்றும் பாவேந்தர் குடும்பத்துடன் தமிழன்பன் அவர்களுக்குத் தொடர்பு இருப் பதைக் கதவுரை நமக்கு அறிவிக்கிறது.

முனைவர் வ.ஜெயதேவனின் "பாட்டு இடையிட்ட உரைநடைக் காப்பியம்" என்ற தலைப்பில் அணிந்துரை, பேராசிரியர் சி. அ. சங்கரநாராயணனின் "பாரதியார்- பாரதி தாசன்- தமிழன்பன்" என்ற தலைப்பில் வாழ்த்துரை, விழிகள் திரு.தி.நடராசனின் பதிப்புரை, தமிழன்பன் அவர்களின் 87 ஆவது பிறந்த நாள் பரிசுப்பதிப்பாக இந்த நூலைப் பதிப்பித்துள்ள நியூயார்க் வாழ் சண்முகம் பெரியசாமியின் நன்றியுரை, "உங்களுக்காகப் பழைய நினைவுப் பதிவு", "அறிஞர்கள் பார்வையில் தமிழன்பன்" எனப் பல அம்சங்கள் நூலின் வரவேற்புத் தோரண வாயில்களாக அணிவகுத்து, வாசகர்களை முழுவீச்சில் இப்புத்தகத்தைப் படிக்க ஊக்குவிக்கின்றன.

பாவேந்தருடன் தாம் பழகிய அனுபவங்களை 36 அத்தியாயங்களாக அமைத் துள்ளார் ஈரோடு தமிழன் பன். பல அத்தியாயங்களில், முடிவுச் செய்தியை அந்தந்த அத்தியா யங்களின் இறுதியில் தராமல், அதன் தொடர்ச்சியை அடுத்த அத்தியாயத்தில் தந்திருக்கிறார். புத்தகத் தைத் தொடர்ந்து ஆர்வமுடன் வாசிக்க வாசகர்களைத் தூண்டும் இந்த புதுமை யான உத்தியை - வளரிளம் படைப்பாளி கள் கவனத்தில் கொள்ளலாம்!

வளரும்...

நரம்பியல் மருத்துவர் தமிழ்ச்செம்மல் மெய்கண்டான்

4

நேரடியான, குழப்பம் இல்லாத, பார்வைக் கும், உணர்வுக்கும் புரிந்ததை நம்பி அப்ப டியே ஏற்றுக்கொண்ட மனம் கொண்ட மனித இனம் தான் முதலில் இருந்த மக்கள்.

புவி மண்டலத்தின் மையமாக நாம் தான் இருக்கிறோம் என்ற செருக்கு கொண்டு இருக்கலாம். தெய்வங்கள், மத உணர்வுகள், மன்னர்கள் என்ற எண்ணங்கள், மனித னின் "தன்னை" மையப்படுத்தியே அமைக் கப்பட்டுள்ளன.

சில மத ஞானிகள் "தான்" அழிய வேண்டும் - வானம், ஆன்மா, வான்வெளி என்று யோசிக்கத் தொடங்கியதுதான் அறிவுப் புரட்சியின் தொடக்கம்! 15-ஆம் நூற்றாண்டு போலந்து நாட்டின் நிகோலஸ் கோபர்நிகஸ் கூறியது, பல்லாண்டு கதை யையும், நம்பிக்கையையும் எதிர்ப்பதாக இருந்ததால், பயந்து போய், தான் இறக்கும் தருவாயில்தான் தன் கருத்தை வெளியிடத் துணிந்தார்.

பின்னர் கலிலியோ, தன் புதிய தொலை நோக்கி மூலம் சூரியன் வானுலகின் நடுவில் இருப்பதாகச் சொன்னதற்காக, சர்ச் பாதிரிமார்களால் தண்டிக்கப்பட்டு மன்னிப்புக் கோரி, கருத்தை மாற்றிக் கொண்டார்.

18-ஆம் நூற்றாண்டில் பிராட்லீ என்ற அறிஞர், ஒளிபரவலின் வித்தியாசங்களைச் சொல்லி வந்தார். 19-ஆம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியில் நம் பூமி, சூரிய னைச் சுற்றி வருவதை, அனைவரும் ஏற்றுக்கொண்டு விட்டோம். ஆனால் இன்னும் நம் ஆழ்மனதில், பேச்சில், சிந்த னையில் புவியை சூரிய மண்டலத்தின் மையமாகப் பதித்து வைத்துள்ளோம்.

வளரும்...

பட்டினத்தார்

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

பன்னிரு திருமுறையில், பதினோராம் திருமுறையில் காணப்படும் பக்திமுறை சிவனடிச் சான்றோர்களில் பட்டினத்தார், பரவசமூட்டும் பாடல்களைத் தமிழுக்குத் தந்தவர்.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் காவிரிப் பூம்பட்டிணத்தில் தோன்றி, வளர்ந்து, புகழ் பெற்றுத் திகழ்ந்தவராவர். கடல் வணிகம் செய்து? மிக்க செல்வம் பெற்றுத் திகழ்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இவரின் பெயர் திருவெண்காடர் எனத் தெரிகிறது. இவருடைய தந்தை பெயர் சிவநேசன் என்றும், தாய் ஞானாம்பிகை என்றும் கூறுகின்றனர்.

இவருக்குத் திருமணமாகி, மருதவாணன் என்றொரு மகன் பிறந்து பதினாறு வயதில் மரணமடைந்த சோகம் ஒன்று இவர் வாழ்வில் நிகழ்ந்திருக்கிறது.

அவனும் வணிகத்தில் நன்கு பொருளீட்டி வந்திருக்கிறான். ஆனால், அவனும் ஒரு நாள் இல்லறப் பற்று நீங்கி **'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே'** என ஒரு ஓலையில் எழுதி வைத்து வெளிச் சென்று மறைந்து விட்டதாக சொல்லப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகள், திருவெண்காடரைத் துறவு பூண்டு செல்வதற்குத் தூண்டியிருக் கின்றன. தலைமைக் கணக்காயர் என்ற சிவனடிச் சான்றோரிடம் செல்வத்தை ஏழை மக்களுக்கு வழங்கச் சொல்லிவிட்டு, திரு வோடு ஏந்தி, தாயையும், மனைவியையும் விட்டுத் துறவரம் பல சிவபதிகள் நோக்கி சென்று, இறைபக்தியாய்ப் பாடல்கள் பாடி வந்திருக்கிறார்.

திருவிருடைமருதூரில் இருக்கும் பொழுது தாயார் இறந்த செய்தி கேட்டு, அங்கு சென்று இறுதிக் கடன்களை ஆற்றி விட்டுத் திரும்பி போயிருக்கிறார். பின்பு தான் திருவிருடைமருதூர் மும்மணிக் கோவை பாடலைப் பாடியிருக்கிறார்.

வளரும்...

அறிஞர் திலகம் ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை

கத்தோலிக்கர்களுக்கு அவர்கள் இஷ்ட அருள் ஞானிகளிடம் உள்ள பிரிதீ யைவிட, இந்துக்கள் தினம் தங்கள் இஷ்ட தேவதையின் பேரில் பிரீதி வைக்கிறார்கள். சிலர் கணேச மூர்த்தம் போன்ற தொன்றை பூஜிக்கவும் செய்வார்கள். இன்னும் சிலர், இன்னும் அதிகம் பற்று செலுத்தி ஸ்ரீநடராஜ மூர்தத்தையும் தியானிப்பார்கள்,

அதீதப் பொருளின் மேல் பற்றுடை யவர்களோ தியானத்துக்கு ரூபத்தைத் தேடார்கள். ஆனால் இவர்கள் மிகவும் கொஞ்சம். இஷ்டதேவதையல்லது சகனமூர்த்தம் அல்லது இஸ்வரனின் எதோ ஒரு தோற்றத்தை உபாசிப்பார்கள்.

அந்த தெய்வத்தின் அகந்த கல்யாண குணங்களை வர்ணிக்கும் சில மந்திரங் களை உச்சரித்தும், அதன்மூலம் அதனால் விளக்கும் மனோரூபல்களை தியானிக் கவும் செய்கிறார்கள், இம்மனோரூபங்களும், கலைவல்லான் தரிசிக்கும் ரூபங்களு மேயாம். அவ்விருவர்கள் தரிசிக்கும் விதமும் ஒன்றேயாகும். உதாரணமாக ரூபாவம் என்ற சிற்பசாஸ்திர சுலோகம் உதகரிக்கின்றோம்.

'இவை சிவபெருமானின் குறிகளாகும். திவ்யதிரு மேனி, முக்கண், அம்பும்வில்லும், சர்ப்பமாலை, கர்ணபுஷ்பம், ருத்திராக்க மாலை, நாலுகை, திரிசூலம், பாசம், மான், அபயகரம், (சாந்தத்தையும், அனுக்கிரகத் தையும் காட்டுவது) புலித்தோலாடை, சங்கம் வெண்மையுடைய எற்றுவாகனம்."

இதனை, காயத்திரியை ஓர் சக்தி தேவதையாக பாவித்து தினந்தோறும் தியானிக்கும் தியான மந்திரத்துடன் ஒத்திடுவோம்.

"சாயங் காலத்தில், சரஸ்வதியை, சாமவே தத்தின்சா சமாகவும், முககாந்தியுடைய வளாகவும், இரண்டு காமுடை யவளாகவும், திரிசூலத்தையும் தமருகத்தையும் தரித்த வளாயும், விருத்தையாகவும், ருத்ராணி யாகவும், வெள்ளேற்றை வாகனமாகவு டையவளாகவும் தியானிக்கவேண்டும்."

வளரும்...

நூறாண்டுகளுக்கு முன் அறிஞர் ஆனந்த குமாரசாமி எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு.....

சர்வதேசத் தாய் மொழி தினம் - பிப்ரவரி 21

முனைவர் வி. அன்புமணி,
தலைவர், இந்தி மற்றும் இதர மொழிகள் துறை,
கொங்கு காலை அறிவியல் கல்லூரி, ஈரோடு

2

உலகில் மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் கட்டாயம் தாய்மொழி உண்டு. அது எழுத்து வடிவம் கொண்டதாக இருக்கலாம்; எழுத்து வடிவம் அற்றதாகவும் இருக்கலாம். ஆனால் தாய்மொழி அற்றவர் என எவருமிலர்.

எத்னொலோக் (Ethnologue) என்ற இணையதள பதிப்பகத்தின்படி தற்போது உலகம் முழுவதும் 7111 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இதில் 2895 மொழிகள் அதாவது 40% மொழிகள் அழியும் நிலையில் உள்ளன. ஒரு சில மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் குறைவென்கிறது புள்ளி விபரம். 7111 மொழிகளில் ஏதேனும் ஒன்று பரந்து விரிந்த பூமியில் உள்ள அனைவருக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்பதே உண்மை.

தாய்மொழி என்பது வெறும் பேச்சு மொழியன்று; நம் கருத்தைப் பதிவு செய்யும் கருவி மட்டும் அன்று. தாய்மொழி என்பது இனம் சார்ந்த விஷயங்களை, மண் சார்ந்த கலைகளை, பாரம்பரியப் பெருமைகளை, பண்பாட்டுக் கூறுகளை, உணவுப் பழக்க வழக்கங்களை, இலக்கியப் பொக்கிஷங்களை, மனிதகுல வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் மாபெரும் சக்தி. அந்நிய தேசத்திலும் அதனால்தான் தாய்மொழி பேசுபவரைக் கண்டால் நம்மை அறியாமல் அவரிடம் ஒரு பிரியம் தோன்றுகிறது; பரிவு ஏற்படுகிறது.

தாய் மொழி என்றால் நம் அனைவருக்கும் இனம் புரியாத பற்று எப்போதும் உண்டு. உலகில் 99 சதவிகிதம் பேர் எத்தனை மொழிகள் கற்றிருந்தாலும், தாய் மொழியில் எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும் (நம் நாட்டில் மட்டும் காணும் சாபக் கேடு) கூட தாய் மொழியில் சிந்திப்பது தான் வழக்கம். அதுதான் அதன் சிறப்பு. எனவேதான் இந்த நாள் உலக அளவில் கூடுதல் கவனத்தைப் பெறுகிறது. ஆனால் உண்மை நிலை என்னவெனில் இதனை நாம் பெரியளவில் கொண்டாடுவது இல்லை. பிப்ரவரி என்றாலே நம் நினைவுக்கு வருவது காதலர் தினம் என்றாகி விட்டது துர்பாக்கியமே!

வளரும்...

மலையாள மாகவி
துஞ்சத்து இராமானுச எழுத்தச்சன்

1

சிந்தனைச் செம்மல் செங்கோட்டை சனார்த்தனன்

மனிதன் தன் உள்ளுணர்வுகளை - எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காகக் கண்டுபிடித்த ஒரு பண்பாட்டு உயர்நிலை தான் மொழி. இன்றைய சூழலில் எந்த ஒரு மொழிக்கும் அதற்கெனச் சில செயற்களங் களுள்ளன. சில சாதனைகளுமுள்ளன. அவற்றைப் படித்துத் திளைக்கக் கற்றுக் கொள்வது தான் உயர்ந்த பெருமைப்பாடு. மனிதன் இவ்வுலகில் பிறந்தது முதல் பல வற்றைக் காண்கிறான். பல செய்திகளைக் கேட்கிறான். இவை மூலமாக அவன் பெற்ற நுகர்வுகளைத் தனக்குத் தெரிந்த மொழி யில் நளினமாக நயம்பட கூறத் தொடங் குகின்ற போதுதான் அது கவிதையாக வடிவம் பெறுகிறது.

இத்தகைய கவிதை மரபை மலையாள மொழி சந்தித்தது பதினைந்தாம் நூற்றாண் டில்தான். அதாவது தமிழகத்தில் அருண கிரிநாதர் வாழ்ந்த காலத்தில் பத்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற் றாண்டு வரையுள்ள காலத்தை மலையாள இலக்கியத்தின் தொடக்க காலம் எனலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த “செறுசேரி நம்பூதிரி” எனும் கவிஞரின் “கிருஷ்ண காதா” எனும் படைப்புதான் மலையாள மொழியின் நடையை மாற்றிய முதல் படைப்பு.

இந்த செறுசேரி எனும் கவிஞர் வடிவமைத்த இலக்கியச் சோலையில்,

பல்வேறு பழ மரங்கள் வளர்த்த பெருமை, மகாகவி துஞ்சத்து இராமானுச எழுத்தச் சனையே சாரும்.

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி, கேரளத்தின் சமூக அமைப்பு தாறுமாறாகக் கிடந்த வேளையில் அன்று வாழ்ந்திருந்த சிற்றரசர்களும், சீர்பெருமக்களும் தமக்குள் கலகம் விளைவித்து நாட்டை அழிவுக்குக் கொண்டு சென்றனர். இந்த இருள் சூழ்ந்த வேளையில்தான், அம்மக்களின் வாழ்வில் ஒளியூட்ட, அவர்களுக்கு வழிகாட்ட, பருவத்தே வந்த வான் மழை போல வந்து பிறக்கிறார் ஒரு வரகவி. அவர்தான் கேரள மக்களால் ” எழுத்தச்சன் ” என அன்புடன் அழைக்கப் பெற்ற துஞ்சத்து இராமானுச எழுத்தச்சன். அவரது அற்புதப் படைப்புகள் இந்தப் பேருலகப் போக்கினைப் புரிய வைத்தன. மனித வாழ்வின் புதிர்களைக் கட்டவிழ்த்தன.

வளரும்...

மூலம் : பேராசிரியர் தும்மல இராமகிருஷ்ணா
துணை வேந்தர், திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.
ஆந்திரப்பிரதேசம்.

1

காலை....

குழந்தைகளின் அடாவிடி....... தூங்கி எழுவது ..... குளியல்....

பள்ளி உடைகள், பைகள்..... டிபன் பாக்ஸை சரிசெய்துக்கொள்வது

பழக்கமில்லா வேலை.

வேலைக்காரன் வரவில்லை..... வெறுப்பு.

எதன் மீதும் கவனம் இல்லை .

ஏதோ ஒரு ஆலோசனைகள்..... ஆராத காயங்கள்......

விதவிதமான நினைவலைகள்.

மூர்த்தி வீட்டின் புன்பு வந்து நின்றுக் கொண்டான்.

பார்வை கார்டனின் (தோட்டத்தின்) பக்கம் சென்றது.

இரண்டு நாட்களாக தண்ணீர் ஊற்றவில்லை.

சாரய்யா என்னவானானோ? சொல்வதற்கு ஆளே இல்லை.

விதவிதமான பூச்செடிகள்.

பலவகை வர்ணங்களில் ரோஜாக்கள்.

ரோஜா.... பிங்க்.... மஞ்சள்.... மில்க்வைட்..... வெள்ளை மஞ்சள் சிவப்பு.

வர்ணங்களோடு கலந்த கோதுமை வர்ணம்.

பூசணிப்பூக்கள்..... சம்பங்கி.... சாமந்தி ..... கனகாம்பரம்

காலையில் முத்துக்களைப்போன்று இருந்து மத்தியானத்திற்குள் கெம்பாக பாறிவிடும் பூக்கள் பரிமளிக்கின்றன.

வந்து போகிறவர்களுக்கு.... நின்று பார்த்துச் செல்கின்றனர்.

பென்சிங்கிலிருந்து துராய் குட்டிகள் தொங்கி பார்க்கின்றன மரங்கொத்தி பறவைகள், வாலை ஆட்டுகின்றன. சிட்டுக்குருவிகள் கீழ்... கீச்சென்று சப்தம் செய்துக்கொண்டு அங்கும் இங்கும் எகிறிக்கொண்டிருக்கின்றன.

வளரும்...

தமிழில் : முனைவர் பா.அ.முனுசாமி,
தமிழ் மொழியியல் மற்றும்
மொழிபெயர்ப்புத்துறை,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை.
தமிழ்த்தாய் 73-தமிழாய்வுப் பெருவிழா
அறப்புரலவர் - கவிஞர் யூசி தைவான்
தாமரைத் திரு அறிஞர் ஔவை நடராசன்
அறக்கட்டளைப் பொழிவும் நூல் வெளியீடும்
அழைப்பிதழ்
நாள் : திருவள்ளுவராண்டு 2052, விகாரி, மாசி - 14
வள்ளலார் ஆண்டு 198
26.2.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி
நிகழிடம் : பேரறிஞர் அண்ணா கருத்தரங்கக் கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தலைமை : முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர் - தமிழ்வளர்ச்சித்துறை மற்றும்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
வரவேற்புரை : முனைவர் சு. தாமரைப் பாண்டியன்
உதவிப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
பொழிவாளர் : முனைவர் உலகநாயகி பழனி
இயக்குநர், தமிழ்வளர்ச்சிக் கழகம்
சென்னைப் பல்கலைக்கழகம்
பொருண்மை : நாவேந்தரின் மேடைத் தமிழ்
முன்னிலை : முனைவர் ந. அருள்
இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை
தலைமைச் செயலகம்
அனைவரும் வருக !

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
துணைவேந்தர் ஔவை நடராசன் அறக்கட்டளை
சொற்பொழிவும் - நூல் வெளியீடும்
அறப்புரலவர் - கவிஞர் யூசி தைவான்
முதற் சொற்பொழிவு : தாமரைத்திரு ஔவை நடராசன் - பன்முகப் பார்வை
பொழிவாளர் : பேராசிரியர் இரா. மோகன்
நாள் - நேரம் : 28-2-2018 - 12.00 மணி
இரண்டாம் சொற்பொழிவு : மேடை மின்னல்கள்
பொழிவாளர் : பேராசிரியர் இராம குருநாதன்
நாள் - நேரம் : 26-2-2020 - 11.00 மணி

1. இன்றைய 17.02.2021உலகத்தமிழ் மின்னிதழ் மிக அருமை .

நிறைய செய்திகளை அறிய தருகிறது உலகத் தமிழ் என்றால் அது மிகையல்ல.

யுவல் நோவா போன்ற எதிர்காலவியலாளர்கள் முன்மொழிவது போல, உலகமே மல்லாட வேண்டிய அந்த மூன்று முக்கிய எதிரிகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள முடிந்தது ஆசிரியம் பகுதியிலிருந்து. சிறிய விளக்கம்தான் என்றாலும் சிறப்பானதொரு விளக்கம் கிடைத்திருக்கிறது தேன்துளி-2-ல்.

தமிழக அரசின் விருதுப் பட்டியல் மூலம் விருதாளர்கள் அனைவரையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

குழந்தைப் பாடல்களை எழுதியவர்களையெல்லாம் நன்றாக நினைவுப்படுத்தி எழுதி வரும் முனைவர் தேவி நாச்சியப்பன் பாராட்டுக்குரியவரே.

இன்னும் சொல்லலாம் வரிசைக்கட்டி.

இத்தனை நல்ல நல்ல படைப்புகளையெல்லாம் 34-பக்கங்களில் தரும் வித்தை முனைவர் ந.அருள் அவர்களாலேயே இது சாத்தியம்.

கவிஞர் பேரா,
தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதாளர்,
திருநெல்வேலி.

2. *Arul your உலகத்தமிழ் has reached our inner-wheel club madurai Everybody is praising a lot I told them about you*

அனைவரும் உனக்கு அவர்களின் வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்களை தெரிவித்தார்கள்

.....திருமதி சீதை மெய்கண்டான்,
மதுரை.

3. *63,*
A Sacred Number
I am moved to
think of
ThiruTthondar
Thirunaamakkovai:
I translated way back

Proemial Invocation
Names numinous of servitors true to praise with fervor The Five-Armed ONE's Feet shall favor.

Text
Tillai indwellers, Andhanars, Neelakantanaar's weal,
Iyarpagai gave his house to serve a meal,

Hoary Ilayaankudimaaran, Meypporul with Thatthan,
Unshirking Viranmindar with joy in Devaasiriyan,

Amarniti, Eripattar,famed Yenaathi ,
Kalayar,Lord Kannappar of love on Ponmukali,

Mighty Maanakkancharar, Arivattaayar,Aanaayar on flute,
Discernibg Moorthy gnostically cute,

Lofty Murukar,Pasupathy neckdeep and Naalaippovaar,
Signed in Thirukkurippatthondar for

The Cause,Chandeesar Vedic, Vaageesar, Kulacchirai,
Kurumpar of Mizhalai in service poised by,

Serving the fruit Ammai of Kaaraikkaal,
Appoothy, Neelanakkar, once and for all,

Naminandi lit, triple Tamil dulcet
Fostered by Sambandhar, breaking Yaazh yet,

Kalikkaamar curt,Arunmoolar, Dandi well beknown,
Moorkar, Somaasimaaran, Saakya pelting stone,

Sirappuli in defence to safeguard,
Sirutthondar, Ceramaan, Gananaathar in accord,

Valiant Kootruvan, Pukazhcholan there,
Narasingamunaiyaraiyar unfair and fair,

Ayyar Atipattar, Kalikkampar,Kaliyar,Sakthi to state,
Ayyatikal Kaatavarkon in sequence intimate

With Kanampullar, Kaari, Nedumaarar, Vaayilaar good,
Munaiatuvaar infrontal position stood;

Kazharsingar, Idamkazhi, Serutthunai of Thanjai,
Peak-preformer Pukazhthunai, Kotpuli ever by,

For the trine eyed Siva Bhaktas bow,
Sing chant, hymn, ever then and now,

Annexing conscious to Sivam Supreme,
In daily hymnody of a theme of theme,

Paving the Via to Entelechy and Mukthi,
Fully nocent, sensing Infinity,

All those born in Aaroor's Nativity,
All in contact with Lord's mien in verity,

All holy ash bedaubed and coated outright,
All reaching the Feet-concept aright,

And the faculty of Poosalaar, Maani,
Nesan, Chengatchozhan abiding births, see

The Chaste Paanan Neelakantan strumming,
Sataiyan, Isaignaani and all do humming,

Lacing these legends in anthology of a hymn
In our midst is fair Vanthondar with vim,--

Their Feet Pairs, cogitate may we,
And contemplate on this argosy

Of pearly mantric numen-beads of love immense
To tell and be freed from solo-little knowledge, tense

Fancy vain vertiginous;if we chant the names amain
Last we shall in ceaseless perfection certain!

Dr TNR's stress on my ness and I- ness linked to karma reminds me of Gothe's Faust - logistics of deed/ act/karma by divine will triggered according to the sense Pacu/Being makes of it: I give the quote in part:

Tis writ, "In the beginning was the Word!"
I paused, perplex'd! Who now will help afford?
I cannot the mere Word so highly prize;
I must translate it otherwise,
If by the spirit guided as I read.
"In the beginning was the Sense!" Take heed,
The import of this primal sentence weight,
Lest thy too hasty pen be led astray!
Is force creative then of Sense the dower?
"In the beginning was the Power!"
Thus should it stand: yet, while the line I trace.
A something warns me, once more to efface.
The spirit aids! from anxious scruples freed,
I write, "In the beginning was the Deed!"
- Goethe's Faust (Scene 3, The Study)

Ref Pathikangalai Patiyungal by Seethai Meykantaan's.. Kaazhi Naathan , Vediyan are special appellation to an excelsior class of Saivism to which Tirugnanasambandhar belongs. Mere listening to the chant of the hymns of our Saint shall repel deeds.

This is well pointed out by Seethai Meykantaan's.

Listen to the hymn:

" A Segment of His is Uma
Abider at Tiruvalamchuzhi is He.
Pharmacon sure is He
Him sings this decad by Kaazhi Gnanasambandhan.
Servitor-singer- listener that sings and listens this Nattaraagam Decad, Deeds never afflict.
Across birthing and birth sequels, never grief strikes them.

What a cover, What immunity what assurance to a community of Faith in Sruthi and Smruthi " listening in the pann specific " in Valamchuzhi. Divine design. We have an ear! Right Whorled Chank like Organ to receive the input!

.....Prof.S.A.Sankaranarayanan,
Kumbakonam.

4. *உலகத் தமிழ் வார இதழில் என் எழுத்தை அங்கீகரித்து கட்டுரை வெளியிட்டு அறிவுலகில் எனக்கு புதிய வாசலைத் திறந்து விட்டமைக்கு என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஐயா.*

..... முனைவர் வி.அன்புமணி, ஈரோடு

5. பாவேந்தர் வாழ்ந்த இல்லத்தின் படத்தைத் தாங்கி, பாங்காக மலர்ந்துள்ளது அறுபத்து மூன்றாம் உலகத் தமிழிதழ். அப்படத்தினைப் பார்க்கும் போதே நமக்கு மெய்சிலிர்ப்பு ஏற்படுகிறது.

தமிழர்கள் மீது காந்தியடிகள் கொண்டிருந்த சகோதர பாசத்தைக் குறிப்பிட்ட அமைச்சர் பெருமான், அப்போதிருந்தே அவர் தமிழ் கற்கத் தொடங்கியதையும் குறிப்பிட்டிருப்பது சிறப்பு ஆகும்.

அண்மையில் உத்தரகாண்டில் நிகழ்ந்த பனி மலை வெடிப்பையும், குறுகிய நேரத்தில் நூற்றுக்கணக்கான ஆட்களை அது காவு வாங்கிய கொடுமையையும், ஆசிரியம் பகுதி அதிர்ச்சி ஊட்டும் வண்ணம் விவரிக்கிறது. இயற்கை சீறினால், இறுமாப்புடைய மாந்தன் கையறு நிலையில் கட்டுண்டு விடுகிறான்!

புலவர் நீ.க.அவர்களின் தமிழ்ப் பற்று அளவிடற்கரியது ஆகும். உறுப்பினர் கூட ஆக இயலாத சிறு அகவையிலேயே சங்கப் பணிகளில் தம்மை அவர் ஈடுபடுத்திக் கொண்டது, ஆர்வத்திற்கு அகவை ஒரு தடை அன்று என்று அழகாக எடுத்துரைக்கிறது.

நந்தா விளக்கென நல்லொளி வீசுகின்ற திரு. நந்தகுமார் அவர்களுக்கு, முனைவர்.ந.அருள் அவர்களின் வண்ணத் தமிழ் வாழ்த்துப்பா, அன்னாரின் சிறப்புகளை அழகுற விளக்குகிறது.

முனைவர் சோமலெ அவர்களின், சைபீரியாவில் பிறந்து அமெரிக்காவில் தத்தெடுக்கப்பட்ட, இரண்டு கால்களுமற்ற நீச்சல் வீராங்கனை ஜெசிக்காவின் நிகரற்ற சாதனை குறித்த பதிவு, பிறவியிலேயே இரு கைகளும் இல்லாமல் அமெரிக்காவில் பிறந்த ஜெசிக்கா காக்ஸ் எனும் மற்றொரு வீராங்கனையை நினைவுபடுத்துகிறது! அந்தப் பெண் பெரியவளாகி, ஜிம்னாஸ்டிக், நீச்சல், நடனம், குதிரை ஏற்றம், ஸ்கூபா டைவிங் எனும் ஆழ்கடல் நீச்சல், மகிழுந்து, விமானம் ஓட்டுதல் இவற்றோடு, கராத்தேயில் கருப்பு பட்டை வென்று, தன் கராத்தே ஆசிரியரையே மணந்து வீரப் பெண்மணியாக வாழ்ந்து வருகிறாள்! இருவருக்கும் பெயரில் கூட ஒற்றுமை!

உரைவேந்தர் ஔவை துரைசாமி ஐயா அவர்கள் சமண முனிவர்களின் தமிழ்த் தொண்டு குறித்தும், ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்தும் குறிப்பான கருத்துக்களைக் கூறியுள்ள சிறப்பு போற்றுதற்குரியது ஆகும்.

கோயில்கள் கலைகளின் இருப்பிடமாகத் திகழும் கோலத்தை, பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடியதையும், திரு.வி.க. அவர்களின் மேற்கோளையும் காட்டி, மூதறிஞர் மாணிக்கனார் விளக்கியிருப்பது சிறப்பு.

குழந்தை இலக்கியத்தில் சிக்கனத்தின் சிறப்பைப் போதிக்கும் சீரிய பாடல்களைத் தொகுத்தளித்து இருக்கிறார் முனைவர் தேவி அவர்கள்.

மருத்துவர், தமிழ்ச் செம்மல் மெய்கண்டான் அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த ஆதி மனிதரின் வாழ்வினை, அதன் சிறப்பினை, அறியாமையினை, சுவைபட விளக்கியுள்ளார்.

உலகத் தாய்மொழி நாளின் சிறப்பு குறித்து முனைவர் அன்புமணி அவர்கள் வரலாற்றுச் சான்றுடன் தெளிவாக விளக்கியுள்ளார். அதற்கும் முன்பு, அதனினும் முனைப்புடன், நம் தமிழகத்தில் நடந்த இந்தி எதிர்ப்புப் போர், நமக்கென்று தனி வரலாறு இன்மையால், உலகோரால் கவனிக்கப்படவே இல்லை என்பது நம் உள்ளத்தில் நின்று உறுத்தும் ஓர் உண்மை ஆகும்.

..... திரு.துரை தனபாலன்

6. நீச்சல் வீராங்கனை ஜெசிக்கா பற்றிய கட்டுரை அருமை. பலருடன் பகிர்ந்தேன்.

- திரு. ராஜரெத்தினம், இ.ஆ.ப. (ஓய்வு), சென்னை

7. தன்னம்பிக்கையின் தலைமகளாக விளங்கும் நீச்சல் வீராங்கனை ஜெசிக்கா வின் சாதனைக் கதை அருமை. படிக்க சலிக்காத வண்ணம் அதைத் தாங்கள் சொல்லியுள்ள விதம் உள்ளத்தை ஈரக்கிறது.

- கவிஞர் வெற்றியூர் திருஞானம்

8. அரிய மனுசியைப் பற்றிய, ஆனால் அறிய வேண்டிய மனுசியைப் பற்றிய எளிய ஆனால் அழகிய அறிமுகம். தொடர்க... வாழ்த்தும், பாராட்டும்.

- திரு. சந்திரகாந்தன், எழுத்தாளர், சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம்

9. Super கட்டுரை. ஊக்கம் தரும் ஜெசிக்கா! நன்றி.

- திருமதி. சுகன்யா ஸ்ரீனிவாசன், பெங்களூரு

29. ANTONY & CLEOPATRA

Sl. No	Topic	Author	Year	Publication	Mode
1.	Antoniovum cleopatravum	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
2.	Neelakkuyilin Kathal	Anandan	1958	Tamilakam, Madras	Story form
3.	Antony & Cleopatra	Ko. Selvan	1964	Venkataram Patipagam, Madras	Translation
4.	Neelanadi Ezhilarasi	James Lourdu	1974	Vairam Patipagam	Translation
5.	Antonium Cleopatravum	Aru Somasundaram	1975	Ponmudi Patipagam, Karaikudi	Translation
6.	Antonium & Cleopatravum	Avvai Natarajan & Vairamuthu	1975	***Unpublished***	Translation
7.	Antonium Cleopatravum	Kribendra Babu	1980	Ganesh Publication, Kovilpatti,	Translation

30. CYMBELINE

Sl. No	Topic	Author	Year	Publication	Mode
1.	Sarasangi	Salasalochona Chettiar	1897	Sree Lalith Press, Madras	Adaptation
2.	Cimhalanathan	Pammal Sambanda Mudaliar	1907	Brittiania Publicity, Madras	Adaptation
3.	Cymbeline	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
4.	Himarjunai	V. Gopala Iyengar	1911	Madras Indian Printing Works, Madras	Adaptation
5.	Cymbeline	Sankaradoss	1920		Translation
6.	Satyavati	T. Lakshmana Pillai	1942	S.T. Reddiar & Sons Trivandrum	Translation
7.	Kanaiyaliyin Kathai	Anandan	1958	Tamilakam, Madras	Story form
8.	Cymbeline	Kamala Joseph	1962	Christian Literature Society, Madras	Translation

திரு.அறிவரசன், தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் 1982ஆம் ஆண்டு முதல் தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை அவர் நினைவாக வெளியிடுகிறோம்.

10

181	Adventure tourism	வீரவிளையாட்டுகள் நடைபெறும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்
182	Auster	தென்றல்
183	Anticipatory Bail	முன் பிணையம்
184	Tamilnadu Agriculture Lands Records of Tenancy Rights Act 1969	தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணப் பதிவுச் சட்டம்
185	Advanced vocational Training scheme	மேல்நிலை வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டம்
186	Aerial photos	விமானம் மூலம் திரைப்படங்களை நிழற்படமெடுத்தல்
187	Active surveilance, passive surveilance	முனைப்பான கண்காணிப்பு, சிகிச்சைக் கண்காணிப்பு
188	Accepting Authority	ஒப்புதல் வழங்கும் அதிகாரி
189	Countersigning authority	மேலொப்பமிடும் அதிகாரி
190	Reporting Authority	அறிக்கை அனுப்பும் அதிகாரி
191	Accelerated Rural water supply programme (ARWSP)	ஊரக குடிநீர் வழங்கல் விரைவுத் திட்டம்
192	Acid diluted seeds	அமிலம் தோய்த்த விதைகளைப் பயன்படுத்துதல்
193	All women Police Station	அனைத்து மகளிர் காவல் நிலையம்
194	All India Council of Technical Education (AICTE) Act	அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம்
195	Arms Act	படைக்கலச் சட்டம்
196	Accident involving fire works	வெடி விபத்து
197	Army Day	படைவீரர் நாள்
198	Attempting inopossilailities	மொட்டைத்தலைக்கும் முழுங்காலுக்கும் முடிச்சுப்போடுதல்
199	Age of Consent	நினைவு தெரியும் வயது
200	Air blower	காற்றுக்குமிழ்களை உருவாக்கும் கருவி

தொல்லிலக்கியத் தோரணம் - 3

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே "

- பெருந்தலைச் சாத்தனார்

- புறநானூறு, 165

எதுவும் நிலையில்லாத இந்த உலகத்தில்,
நிலைபெறவேண்டும் என்று எண்ணியவர், தம்
புகழை நிலைநிறுத்தும் செயல்களைச் செய்து,
தாம் இறந்து போயினர்.

- முனைவர் ஆ.மணவழகன்

In fleeting world lasting seekers
Willed Fame and breathed their last.
(Puranaanooru 165)

மொழிபெயர்ப்பு
முனைவர் ந.அருள்

इस दुनियाँ में कुछ भी निरंतर नहीं है, जो निरंतर माना जाता है, उनकी प्रसिद्धि बढने के कार्य करने के बाद मर जाते हैं।

पुरनानुरू , १६५- पेरुन्तलै चात्तन

இந்தியில்
முனைவர் சௌ.வீரலட்சுமி

தொடர்புக்கு

ulagathamizh@gmail.com

பார்வைக்கும்... படிப்புக்கும்...

www.facebook.com\ulagathamizh

www.twitter.com#ulagathamizh

www.ulagatamil.in

www.utsmdu.org

ulagathamizh.blogspot.com